


இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 301 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – வைகாசி 29 – செவ்வாய்க்கிழமை 11 ஜுன் 2024 – கோவை ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 301 : Thiruvalluvar Year - 2055 - Vaikasi 29 - Tuesday 11 June 2024 - Kovai ★★ 8 Pages ₹ 5.00


## சமூக நீதிக்கு எதிரானது:

# ‘நீட்’ ஆபத்தை முதலில் அறிவித்தது தி.மு.க.!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, ஜூன் 11 -**


**ஏழைகள் மற்றும் சமூகநீதிக்கு எதிரான ‘நீட்’ தேர்வை தேசிய அளவில் முதன்முதலில் அம்பலப்படுத்தியது தி.மு.க.தான் என, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.**



இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான நீட் தேர்வினை இந்தாண்டு 23 லட்சம் மாணவர்கள் எழுதினர். நீட் தேர்வு முடிவுகள் கடந்த 4 ஆம் தேதி வெளியிடப்பட்டது. எந்த ஆண்டும் இல்லாத வகையில் இந்த ஆண்டு 67 மாணவர்கள் 720க்கு 720 மதிப்பெண்கள் பெற்றனர். ஒரே ஒரு கேள்விக்கு தவறாக விடையளித்தாலும், அதற்கான நான்கு மதிப்பெண்கள் மற்றும் நெகடிவ் மார்க்காக 1 மதிப்பெண் என 5 மதிப்பெண்கள் கழிக்கப்படும். அந்த வகையில் முழு மதிப்பெண்ணுக்கு அடுத்து இரண்டாம் இடத்தில் உள்ளவர்கள் 715 மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும். ஆனால், நடப்பாண்டில் சில மாணவர்கள் 719 மற்றும் 718 மதிப்பெண்களை பெற்றது குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கு நாடு முழுவதும் பலத்த எதிர்ப்பு எழுந்தது. உச்சநீதிமன்றத்தில் மாணவர்கள் வழக்கு தொடுத்துள்ளனர். ஏற்கனவே இச்சம்பவம் குறித்து கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த 7ஆம் தேதி சமூக வலைதளப் பதிவில், “சமூக நீதிக்கு எதிரான ‘நீட்’ தேர்வை ஒழித்துக் கட்டும் நாள் தொலைவில் இல்லை!” எனச் சூளுரைத்திருந்தார்.

இந்நிலையில், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (09.06.2024) வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், நீட் தேர்வுக்கு எதிரான பிரச்சாரத்தை முதலில் ஆரம்பித்தது தி.மு.க.தான் என்று கூறியுள்ளார். தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு, நீதிபதி ஏ.கே.ராஜன் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழு நீட் தேர்வினால் ஏற்படும் தாக்கம் குறித்து ஆய்வு செய்ததை குறிப்பிட்டுள்ளார். இந்த குழு மாணவர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் ஆகியோரிடமிருந்து விரிவான பகுப்பாய்வு செய்ததன் அடிப்படையில் ஏழைகள் மற்றும் சமூக நீதிக்கு எதிரான நீட் தேர்வை தேசிய அளவில் பல்வேறு மாநில அரசுகளுடன் முதன்முதலில் அம்பலப்படுத்தியது தி.மு.க.தான் என்று முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார். ஏ.கே.ராஜன் குழுவின் பரிந்துரையின்படி, நீட் தேர்வில் இருந்து விலக்கு அளிக்கக் கோரும் மசோதா தமிழ்நாடு சட்டப்பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டு, ஆளுநர் தரப்பில் இருந்து அதிக கால தாமதத்திற்குப் பின், குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக தற்போது வரை காத்திருப்பதாகவும் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.




நாடு முழுவதும் தற்போது நீட் தேர்வுக்கான எதிர்ப்பு வலுத்து வருவதை சுட்டிக்காட்டியுள்ள முதலமைச்சர், நீட் தேர்வுகளால் ஏற்படும் பாதிப்பு குறித்து அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் நீதிபதி ஏ.கே.ராஜனின் அறிக்கை ஆங்கிலம் உள்ளிட்ட அனைத்து மாநில மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளதாகவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தாம் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் தெரிவித்துள்ளார்.

---

## நாடாளுமன்றத்தில் காங்கிரஸ் குரல் எழுப்பும்!

# ‘நீட்’ முறைகேடு: 24 லட்சம் மாணவர்களின் வாழ்வை சீரழித்து விட்டது!

## ராகுல்காந்தி குற்றச்சாட்டு!

**புதுடெல்லி, ஜூன் 11 -**

**‘நீட்’ முறைகேடு விவகாரம் தொடர்பாக, நாடாளுமன்றத்தில் மாணவர்களின் குரலாக காங்கிரஸ் கட்சி குரல் எழுப்பும் என்றும் பதவி ஏற்பதற்கு முன்பாகவே நீட் தேர்வு முறைகேடு 24 லட்சம் மாணவர்களையும் அவர்களது குடும்பங்களின் வாழ்வையும் சீரழித்து விட்டதாகவும் காங்கிரஸ் கட்சி முன்னாள் தலைவர் ராகுல் காந்தி குறிப்பிட்டு உள்ளார்.**

இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான நீட் தேர்வினை இந்தாண்டு 23 லட்சம் மாணவர்கள் எழுதினர். நீட் தேர்வு முடிவுகள் கடந்த 4 ஆம் தேதி வெளியிடப்பட்டது. எந்த ஆண்டும் இல்லாத வகையில் இந்த ஆண்டு 67 மாணவர்கள் 720க்கு 720 மதிப்பெண்கள் பெற்றனர்.

‘நீட்’ தேர்வில் வினாத்தாள் கசிந்ததாக சர்ச்சை தொடங்கி கருணை மதிப்பெண் வழங்கியதிலும் முரண்பாடுகள் உள்ளதாகவும் இதனால் மறுதேர்வு நடத்த வேண்டும் என்று தேசிய தேர்வு முகமைக்கு 2 ஆயிரம் மாணவர்கள் கடிதம் எழுதியுள்ளனர்.

**2 ஆயிரம் மாணவர்கள் கடிதம்!**

நீட் மறுதேர்வு நடத்த வலியுறுத்தி சுமார் 2 ஆயிரம் மாணவர்கள் கையெழுத்திட்டு கோரிக்கை மனு அடங்கிய கடிதத்தை எழுதியுள்ளனர்.

அந்தக் கடிதத்தில், பீகாரில் வினாத்தாள் கசிந்ததாக எழுந்த புகார், கருணை மதிப்பெண் வழங்கியதில் வெளிப்படைத்தன்மை இல்லை என்ற குற்றச்சாட்டு,

இதுவரை இல்லாத அளவில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு போன்றவைகளை சுட்டிக்காட்டி மறுதேர்வு நடத்த கோரிக்கை வைத்துள்ளனர்.



**மாறுபட்ட மதிப்பெண்கள்!**

தங்களின் எதிர்காலம் தொடர்புடைய விவகாரம் என்பதால் மத்திய அரசும் தேசிய தேர்வு முகமை ஆகியவையும் இதில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர். தேர்வு முடிவுக்கு முன்பே ஒஎம்.ஆர் ஷீட் மற்றும் வினாக்களுக்கான விடைகளையும் தேசிய தேர்வு முகமை வெளியிட்டது. தேர்வு முடிவு வெளியிடப்பட்ட போது ஒஎம்.ஆர் ஷீட்டுடன் ஒப்பிடுகையில், மாறுபட்ட மதிப்பெண்கள் போடப்பட்டு இருப்பதாக பல மாணவர்கள் புகார்களை முன்வைத்துள்ளனர்.

நீட் தேர்வில் முறைகேடுகள் நடைபெற்றதாக புகார்கள் எழுவது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட அரசியல் கட்சித் தலைவர்கள் பலரும் கடும் கண்டனம் தெரிவித்தனர்.

**தேர்வு வாரியம் விளக்கம்!**

அதே வேளையில், நீட் தேர்வில் எந்த குளறுபடியும் இல்லை, நேர்மையான முறையிலேயே நடத்தப்பட்டது எனவும் தேசிய தேர்வு முகமை விளக்கம் அளித்தது. இந்த நிலையில், அகில இந்திய காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி தனது எக்ஸ்தள பக்கத்தில் தெரிவித்துள்ளதாவது:-

“நீட் தேர்வு விவகாரத்தில் மாணவர்களின் குரலாக நாடாளுமன்றத்தில் ஒலிப்பேன். நரேந்திர மோடி பிரதமராக பதவியேற்கும் முன்பே ‘நீட்’ தேர்வு மோசடிகள் வெளிவந்துவிட்டன.

நீட் வினாத்தாள் வெளியான புகாரை ஒன்றிய அரசு தொடர்ந்து மறுத்து வருகிறது. நீட் முறைகேடு 24 லட்சம் மாணவர்களையும் அவர்களின் குடும்பங்களையும் பாதிப்புக்குள்ளாக்கி உள்ளது. மாணவர்களின் எதிர்காலம் தொடர்பான பிரச்சினைகளை நாடாளுமன்றத்தில் எழுப்புவேன். I.N.D.I.A. கூட்டணி மீது இளைஞர்கள் நம்பிக்கை வைத்துள்ளனர், அவர்களின் குரலை ஒடுக்க I.N.D.I.A. கூட்டணி அனுமதிக்காது” என்று தெரிவித்துள்ளார்.

---

### “நான் முதல்வன்” திட்டத்தின் கீழ்

## சிறப்புப் பயிற்சிக்காக லண்டன் சென்ற 25 மாணவர்கள்!

### ‘சிறகுகள் விரியட்டும் – மகிழ்ச்சி!’ – முதல்வர் வாழ்த்து!

**சென்னை, ஜூன் 11–**

**நான் முதல்வன் திட்டத்தின் கீழ் சிறப்பு பயிற்சிக்காக 25மாணவர்கள் லண்டன் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.**

**இதுகுறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதள பதிவில் ‘சிறகுகள் விரியட்டும் – மகிழ்ச்சி!’ என்றும் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.**

இது பற்றிய விபரம் வருமாறு:–

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் கனவு திட்டமான நான் முதல்வன் திட்டம், மாணவர்களின் வாழ்வில் ஒளி விளக்காய் வழி காட்டி வருகிறது. ஐ.ஏ.எஸ். உள்ளிட்ட உயர்பதவிகளை அடைய இத்திட்டம் மாணவர்களுக்கு ஏணியாய் இருந்து உதவி வருகிறது. இந்த நிலையில் இத்திட்டத்தின் கீழ், தற்போது செயற்கை நுண்ணறிவு, தரவு அறிவியல் ஆகிய பயிற்சிகளுக்காக லண்டனின் நியூகேஸ்டல் துர்ஹாம் பல்கலைக்கழகத்திற்கு 15 பொறியியல் மற்றும் 10அறிவியல் மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு ஒரு வார திறன் மேம்பாட்டு பயிற்சிக்காக லண்டன் அழைத்து செல்லப்பட்டுள்ளனர். இவர்களுடன் இரு பேராசியர்களும் உடன் சென்றுள்ளனர். சென்னையிலிருந்து விமானம் மூலம் புறப்பட்ட மாணவர்களை அவர்களின் குடும்பத்தார் இன்முகத்தோடு வழியனுப்பினர்.

இதற்கிடையே, நான் முதல்வன் திட்டத்தின் கீழ் சிறப்பு பயிற்சிக்காக 25 மாணவர்கள் லண்டன் சென்றிருப்பதற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். இதுகுறித்து முதலமைச்சர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், சிறகுகள் விரியட்டும்! மகிழ்ச்சி! என்று வாழ்த்தியுள்ளார்.

---

### மோடியின் பாசாங்குகளை

# தமிழ்நாட்டு மக்கள் நிராகரித்து விட்டனர்!

## ஜெய்ராம் ரமேஷ் பதிவு!

*புதுடெல்லி, ஜூன் 11 -*

*மோடியின் பாசாங்குகளை தமிழ்நாட்டு மக்கள் நிராகரித்து விட்டதாக, காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது.*

*மே 28, 2023 நினைவிருக்கிறதா? என்ற தலைப்பில் காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், கடந்த ஆண்டு மே 28 ஆம் தேதி செங்கோலுடன் மோடி புதிய நாடாளுமன்றக் கட்டடத்திற்குள் நுழைந்த நாள் என்று கூறியுள்ளார்.*

*மோடி ஒரு பேரரசர் என்று நியாயப்படுத்துவதற்கு மட்டுமல்லாமல், தமிழ் வாக்காளர்களை ஈர்க்கவும், 15 ஆகஸ்ட் 1947 ஆம் ஆண்டு வரலாறு, திரிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.*

*அந்த நாடகத்தின் முடிவு இப்போது எல்லோருக்கும் தெரியும் என்று கூறியுள்ள ஜெய்ராம் ரமேஷ், செங்கோல் என்பது தமிழர் வரலாற்றின் மதிப்பிற்குரிய அடையாளமாக உள்ளது,*



*ஆனால் தமிழ் வாக்காளர்களும் உண்மையில் இந்தியாவின் வாக்காளர்களும் மோடியின் பாசாங்குகளை நிராகரித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.*

*கடந்த பத்தாண்டுகளில் அத்துமீறிய அரசியலமைப்புச் சட்டத்திற்கு அடிபணிய வேண்டிய நிலைக்கு மோடி தள்ளப்பட்டுள்ளதாக, காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் விமர்சித்துள்ளார்.*